**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15.08.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்**
**76வது சுதந்திர தின விழா**

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 76வது சுதந்திரதின விழா 15.08.2022 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் தேசியக்கொடி ஏற்றி மரியாதை செய்து சுதந்திர தின விழா உரையாற்றினார்.

தேசிய மாணவர்படை மாணவர்கள் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலர்களை துணைவேந்தர் அவர்கள் ஆய்வு செய்தார். தேசிய அளவிலான விடுதலைப் போராட்ட தியாகிகளுடன் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த தமிழ்நாட்டின் விடுதலை போராட்டத்தியாகிகளான மாசிலாமணிப்பிள்ளை, வட்டக்குடி இரணியன், கமலாராமசாமி, தர்மாம்பாள் போன்றோர்களை நினைவுகூர்ந்தார். பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறைகளில் நிபுணத்துவம், ஆராய்ச்சி குறிப்பாக உயிரிதொழில்நுட்பம், நானோதொழில்நுட்பம், தொலைஉணர்வு, உணவுதொழில்நுட்பம், துல்லிய விவசாயம் அதிக அடர்த்தி நடவுமுறைகள் போன்றவை நமது விவசாய பெருமக்களுக்கு அதிக வருமானம் ஈட்டுவதற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது என்றும் இந்திய பொருளாதாரம் முதன்மை நிலையை அடைய முன்முயற்சிகளை எடுப்பதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார். “தற்சார்பு இந்தியா” பற்றியும் தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தியில் நம் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு குறித்தும் எடுத்துரைத்தார். இந்தியா விவசாயம் மட்டுமன்றி அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியைக்காண அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

மேலும் சர்தார்படேல் சிறந்த ஐ.சி.ஏ.ஆர். நிறுவனவிருது மற்றும் சௌதரிதேவிலால் சிறந்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித்திட்ட விருதை வென்றதற்காக பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் முயற்சிகளுக்கு வாழ்த்துக்களையும்

பாராட்டுகளையும் தெரிவித்தார். இவ்விழாவின் சிறப்பு நிகழ்வாக மெட்ராஸ் ரெஜிமென்ட்டின் கீர்த்திசக்ரா விருது பெற்ற நாயக்கண்ணாளன் கென்னடி-யின் நினைவு படத்திற்கு மரியாதை செய்ததுடன் குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் கௌரவித்தார்.

இவ்விழாவின் நிறைவாக தேசிய மாணவர்படை மாணவர்களுக்கு வருடாந்திர பயிற்சி முகாமில் வெற்றி பெற்றதற்கான பரிசுகள், 76வது சுதந்திர தின விழாவிற்கான போட்டிகளில் வென்ற பள்ளி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் நாட்டுநலப் பணித்திட்ட தன்னார்வலர்களுக்கு துணைவேந்தர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

76வது சுதந்திர தின விழாவில் பல்கலைக்கழக அதிகாரிகள், துறைத் தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பள்ளிமாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**